# மகிழ்ச்சி

## குழந்தைகளின் குதூகலம்

Maria

3



விடை தொகுப்பு

Maria

மரியா பப்ளிஷர்ஸ் (பி) லிட்.

முதல் பதிப்பு 2020

பதிவு அலுவலகம்
138, ஹைவேய்ஸ் காலனி, சுப்ரமணியபுரம், திருச்சிராப்பள்ளி – 620 020.

தலைமை அலுவலகம்
30 & 31, நட்சத்திரா, ஐ.ஏ.எஃப். சாலை, கிழக்கு தாம்பரம், சென்னை – 600 059.
தொலைபேசி : 044 – 22392332

மின்னஞ்சல்
info@mariapublishers.com

இணையதளம்
www.mariapublishers.com

வெளியிட்டோர்
மரியா பப்ளிஷர்ஸ் (பி) லிட்.,
13, சுந்தர்ராஜ் நகர், சுப்ரமணியபுரம்,
திருச்சிராப்பள்ளி – 620 020.
தொலைபேசி : 0431 – 2331245

அட்டை வடிவமைப்பு
முத்துக்குமார்

புத்தக வடிவமைப்பு
பிரியா

அச்சிட்டோர்
தி சபையர் ஆஃப்செட் பிரிண்டர்ஸ்

## 1. இன்பத் தமிழ்

**பக்கம் 9**

**வினாக்களுக்கு விடை தருக.**

1. தமிழின் பெருமைகளை விளக்குக.

   தமிழ் மொழி ஓர் இனிய மொழி. அது தமிழர்களின் உயிருக்கு இணையானது. அது சமூகத்தின் வளர்ச்சிக்கு உறுதுணையாக விளங்குவது. அது எங்கள் வாழ்க்கையில் இரண்டறக் கலந்துவிட்ட மொழி ஆகும்.

2. தமிழ் எப்படிப்பட்ட மொழி என்று பாவேந்தர் கூறுகிறார்?

   தமிழ் மொழி அமுதைப் போன்று இனிமையானது. நம் உயிர்க்கு மேலானதாகும். சமூகத்தின் வளர்ச்சிக்கு உறுதுணையாக விளங்குவது என பாவேந்தர் கூறுகிறார்.

## 2. தவளையண்ணன்

**பக்கம் 11**

**வினாக்களுக்கு விடையளி.**

1. தத்தித் தத்தி ஓடும் போது என்ன செய்வார் தவளையண்ணன்?

   தவளையண்ணன் தத்தித் தத்தி ஓடும் போது தங்கப் பதக்கம் வாங்கப் போறேன்னு தடுக்கி விழுவார்.

2. தாவிக் குளத்தில் குதிக்கும் போது தவளை என்ன செய்யும்?

   தவளை குளத்தில் தாவிக் குதிக்கும் போது ஆவிப் பிடிக்கப் போறேனு அலட்டிக் கொள்ளும்.

3. தவளை எப்போது துள்ளிக் குதித்து ஆட்டம் போடும்?

   வானில் கருத்த மேகம் சூழ்வதைக் கண்டால் தவளை துள்ளிக் குதித்து ஆட்டம் போடும்.

## 3. தமிழர் பெருமை

**பக்கம் 16**

**வினாக்களுக்கு விடையளி.**

1. தமிழ் மொழி "செம்மொழி" என அழைக்கப்படக் காரணம் யாது?

   தமிழ் மொழி அனைத்து மொழிகளுக்கும் முதன்மையானது. உலக மொழிகளில் இலத்தீன், கிரேக்கம், லாவோஸ் போன்று பழமையும், பெருமையும் பெற்றது. நம் தாய்மொழி பிற மொழிகளின் கலப்பின்றி தனித்து இயங்குவதால் "செம்மொழி" என்று அழைக்கப்படுகிறது.

2. தமிழரின் விருந்தோம்பல் பண்பை விளக்குக.

நம் தமிழ் மக்கள் சங்க காலம் முதல் விருந்தினரைப் போற்றி வாழ்கின்றனர். விருந்தினரை வரவேற்று உபசரிப்பது ஒவ்வொரு தலைவன், தலைவியின் கடமையாகும். விருந்தினரை உபசரித்தல் என்பது இல்லற அறத்தின் முக்கிய கடமையாக கருதப்படுகிறது.

3. தமிழரின் வீரம் பற்றி விளக்குக.

பண்டையத் தமிழர்களின் வீரத்தை தொல்காப்பியம் வாயிலாக அறியலாம். பழந்தமிழர்கள் தேர்ப்படை, யானைப்படை, குதிரைபப்படை, காலாட்படை என நால்வகைப் படைகளுடன் போரில் ஈடுபட்டனர்.

4. மூவேந்தர் என்று அழைக்கப்படுபவர் யாவர்?

சேரர், சோழர், பாண்டியர் ஆகியோர் மூவேந்தர்கள் என அழைக்கப்படுகிறார்கள்.

5. கரிகாலச் சோழன் பற்றி குறிப்பு வரைக.

சோழ மன்னர்களுள் புகழ் பெற்றவர் கரிகாலன். இவர் வெண்ணிப் போரில் சேர, பாண்டிய மன்னர்களைத் தோற்கடித்து, காவிரி ஆற்றின் குறுக்கே கல்லணையைக் கட்டினார். பல கால்வாய்களை வெட்டி வேளாண்மையை பெருக்கினார். வெண்ணாறு இவர் வெட்டிய மிகப்பெரிய கால்வாயாகும். இவர் கலை மற்றும் இலக்கியத்தை ஆதரித்தார்.

6. மூவேந்தர்களின் சின்னங்கள், தலைநகரங்கள், துறைமுகங்கள் ஆகியவற்றைப் பட்டியலிடுக.

| மன்னர்கள் | சின்னங்கள் | தலைநகரம் | துறைமுகங்கள் |
|---|---|---|---|
| **சேரன்** | வில் கொடி,<br>பனம் பூ மாலை | வஞ்சி | தொண்டி,<br>முசிறி |
| **சோழன்** | புலிக்கொடி,<br>அத்திப்பூ மாலை | உறையூர் | காவிரிப்பூம்பட்டினம் |
| **பாண்டியன்** | மீன் கொடி,<br>வேப்பம் பூ மாலை | மதுரை | கொற்கை |

## 4. உயிர் எழுத்துகள்

**பக்கங்கள் 19-20**

**அ) விடுபட்ட குறில் எழுத்துகளை எழுதுக.**

அ, இ, உ, எ, ஒ.

**ஆ) நெடில் எழுத்துகளை வட்டமிடுக.**

ஆ  ஈ  ஊ  ஏ  ஐ  ஓ  ஔ

**இ) கீழ்க்காணும் சொற்களின் முதல் எழுத்தை மாற்றிப் புதிய சொற்களை உருவாக்குக.**

1. திடல், கடல், மடல், படல்.
2. போட்டி, பாட்டி, வட்டி, கட்டி.
3. வால், கால், கல், பல்.

**ஈ) கீழ்க்கண்ட சொற்களை உயிர் எழுத்துகளின் வரிசையில் எழுதுக.**

அரசர், ஆடல், இரண்டு, ஈட்டி, உள்ளம், ஊசி,
எருது, ஏடு, ஐயம், ஒட்டகம், ஓணான், ஔவை.

**உ) உயிரெழுத்தில் தொடங்கும் சொற்களை அடிக்கோடிடுக.**

1. ஆறு  2. ஈட்டி  3. உறவு  4. ஏலக்காய்  5. ஒருவன்

## 5. சிங்கமும், முயலும்

**பக்கம் 24**

**வினாக்களுக்கு விடையளி.**

1. பெண் சிங்கத்திற்கு வணக்கம் கூறியது யார்?
   பெண் சிங்கத்திற்கு வணக்கம் கூறியது முயல்.

2. முயலின் சவால் என்ன?
   பெண் சிங்கத்தின் கணவரான ஆண் சிங்கத்தின் முதுகில் சவாரி செய்து காட்டுவதே முயலின் சவால் ஆகும்.

3. பெண் சிங்கத்தைக் காண வர இயலாது என்பதற்கு முயல் ஆண் சிங்கத்திடம் கூறிய காரணம் என்ன?
   தனக்கு காய்ச்சல் அடிப்பதால் பெண் சிங்கத்தைப் பார்க்க வர இயலாது என முயல் கூறியது.

4. முயல் தன் சவாலில் எப்படி வென்றது?
   முயல் சாமர்த்தியமாக தனக்கு உடல்நிலை சரியில்லை என்றும், தன்னால் நீண்ட தொலைவு நடந்து வர இயலாது என்றும் கூறி ஆண் சிங்கத்தின் மேல் சவாரி செய்து தனது சவாலில் வென்றது.

5. இக்கதையிலிருந்து நீ கற்றுக் கொண்ட நீதி என்ன?
   பிறரின் உருவத்தை வைத்து ஏளனம் செய்யக்கூடாது. வாழ்வில் ஒரு போதும் ஆணவம் கொள்ளக் கூடாது.

## 6. திருக்குறள்

**பக்கம் 27**

**அ) எதிர்ச்சொல் எழுதுக.**

1. கடுமை  2. நினைத்தல்  3. தீது  4. காய்  5. அன்பிலார்

**ஆ) வினாக்களுக்கு விடையளி.**

1. "கனியிருப்பக் காய்கவர்ந் தற்று" என்பதன் பொருள் என்ன?
   இனிய சொற்கள் இருக்கும் போது கடுமையான சொற்களை கூறுதல் என்பது தன்னிடமுள்ள இனிமையான கனிகளை உண்ணாமல், இனிமையில்லாத காய்களை உண்பது போன்றதாகும்.
2. உயிரை விட மேலானது எது?
   உயிரை விட மேலானது ஒழுக்கம் ஆகும்.
3. நாவை ஏன் காக்க வேண்டும்?
   ஒருவர் எவற்றைக் காக்காவிட்டாலும் நாவை காத்தல் வேண்டும். அவ்வாறு நாவை காக்காவிட்டால் சொற்குற்றத்திற்கு ஆளாகித் துன்பப்படுவர்.
4. எதை மறக்கக் கூடாது என வள்ளுவர் கூறுகிறார்?
   ஒருவர் செய்த நன்மையை ஒருபோதும் மறக்கக் கூடாது.
5. அன்புடையவர் எவ்வாறு வாழ்வர்?
   அன்புடையவர் தம் உடைமையையும் பிறர்க்கு கொடுத்து வாழ்வர்.

## 7. நன்னெறி

**பக்கம் 28**

**வினாக்களுக்கு விடையளி.**

1. நன்னெறியை இயற்றியவர் யார்?
   நன்னெறியை இயற்றியவர் துறைமங்கலம் சிவப்பிரகாச சுவாமிகள்.
2. எவரை மக்கள் விரும்புவார்கள்?
   இனிமையான சொற்களை பேசுபவர்களையே மக்கள் விரும்புவார்கள்.
3. கடலின் அலை எப்போது பொங்கி எழும்?
   குளிர்ந்த ஒளியைத் தரும் நிலவின் ஒளியைக் கண்டுதான் கடலின் அலை பொங்கி எழும்.

## 8. வாழ விடு! சுகமாய் வாழு!

**பக்கம் 31**

**அ) வினாக்களுக்கு விடையளி.**

1. கந்தன் மரம் வெட்ட எங்கே சென்றான்?
   கந்தன் மரம் வெட்ட காட்டிற்குச் சென்றான்.

2. பலாமரம் கந்தனிடம் என்ன கூறியது?
   பலாமரம் கந்தனிடம், தன்னை வெட்ட வேண்டாம் எனவும், தன்னிடமிருந்து விழுகின்ற சிறுசிறு குச்சிகளை எடுத்துச் செல்லுமாறும் கூறியது.

3. மரத்தை வெட்டுவதற்குக் கந்தன் கூறிய காரணம் என்ன?
   பலாமரத்தை வெட்டிக் கொண்டு போகாவிட்டால் தனது குடும்பமே பட்டினிதான் கிடக்க வேண்டும் என கந்தன் கூறினான்.

4. பலாமரம், தன்னை வெட்டக்கூடாது என்பதற்காகக் கந்தனிடம் என்ன சொல்லி விவாதித்தது?
   "உங்கள் தேவைக்கு எங்களை அழிப்பதா? எங்களையும் வாழ விடுங்கள். எங்களை வாழ விட்டால் தொடர்ந்து பயன் தந்து உதவுவோம்" என்றது பலாமரம்.

5. தேவதை கனவில் வரவில்லை என்றால் என்ன நேர்ந்திருக்கும்?
   தேவதை கனவில் வரவில்லை என்றால் கந்தன் தொடர்ந்து பல மரங்களை வெட்டியிருப்பான்.

**ஆ) சொல் கோபுரம் அமைக்க.**

1. தை 2. ஒலி 3. பல்லி 4. பங்குனி 5. சந்திரன்
6. கரும்பலகை 7. கன்னியாகுமரி

## 9. தமிழ் எழுத்துகள்

**பக்கங்கள் 35-39**

**அ) விடுபட்ட மெய்யெழுத்துகளை எழுதுக.**

| | | | |
|---|---|---|---|
| 1. காட்டெருமை | 4. குரங்கு | 7. பனிக்கரடி | 10. ஓநாய் |
| 2. கங்காரு | 5. வரிக்குதிரை | 8. சிறுத்தை | |
| 3. சிங்கம் | 6. மான் | 9. காண்டாமிருகம் | |

**ஆ) சேர்த்து எழுதுக.**

| | | |
|---|---|---|
| 1. க் + எ = கெ | 8. ல் + உ = லு | 15. ஞ் + ஐ = ஞை |
| 2. த் + ஊ = தூ | 9. ண் + ஒ = ணொ | 16. ள் + ஊ = ளூ |
| 3. ம் + ஆ = மா | 10. ப் + இ = பி | 17. ன் + அ = ன |
| 4. ச் + எ = செ | 11. ர் + ஓ = ரோ | 18. ங் + ஔ = ஙௌ |
| 5. ட் + அ = ட | 12. வ் + ஆ = வா | 19. ற் + உ = று |
| 6. ந் + ஐ = நை | 13. ழ் + ஈ = ழீ | 20. வ் + ஏ = வே |
| 7. ய் + இ = யி | 14. ன் + எ = னெ | |

**இ) வல்லின மெய் எழுத்துகளை சிவப்பு வண்ணத்தால் வட்டமிடுக. (◯)**
**மெல்லின மெய் எழுத்துகளை நீல வண்ணத்தால் சதுரமிடுக. (□)**
**இடையின மெய் எழுத்துகளை பச்சை வண்ணத்தால் அடிக்கோடிடுக. (—)**

1. உ (ப்) பு
2. ச (த்) து
3. ப (ட்) ட [ம்]
4. ந (த்) தை
5. அ <u>ல்</u> லி
6. ப (க்) க [ம்]
7. ப [ந்] து
8. சு (த்) த [ம்]
9. ப <u>ள்</u> ளி
10. சு [ண்] ட <u>ல்</u>
11. கு ய வ <u>ர்</u>
12. சு (க்) கு
13. சி [ன்] ன [ம்]
14. ப ரு (ந்) து
15. நா (ற்) கா லி
16. ச (ங்) கு

**ஈ) மெய்யெழுத்துகளை வட்டமிட்டு வகைப்படுத்துக.**

1. ங் – மெல்லினம்
2. ண் – மெல்லினம்
3. ய் – இடையினம்
4. ந் – மெல்லினம்
5. ட் – வல்லினம்
6. ர் – இடையினம்
7. த் – வல்லினம்
8. ள் – இடையினம்
9. ச் – வல்லினம்
10. ல் – இடையினம்

***சிந்தனைச் சிறகு***

**அ) கொடுக்கப்பட்டுள்ள சொற்களில் உள்ள எழுத்துகளை உயிர், மெய் என தனித்தனியே பிரித்து எழுதுக.**

1. புத்தகம் – ப் + உ, த், த் + அ, க் +அ, ம்
2. எழுதுகோல் – எ, ழ் + உ, த் + உ, க் + ஒ, ல்
3. பை – ப் + ஐ
4. மாளிகை – ம் + ஆ, ள் + இ, க் + ஐ
5. உண்மை – உ, ண், ம் + ஐ
6. கொக்கு – க் + ஒ, க், க் + உ

7. தொடர்வண்டி – த் + ஒ, ட் + அ, ர், வ் + அ, ண், ட் + இ
8. வீடு – வ் + ஈ, ட் + உ
9. யானை – ய் + ஆ, ன் + ஐ
10. கூண்டு – க் + ஊ, ண், ட் + உ

**ஆ) கொடுக்கப்பட்டுள்ள சொற்களில் உள்ள எழுத்துகளை உயிர், மெய், உயிர்மெய், ஆய்தம் என வகைப்படுத்துக.**

| சொற்கள் | உயிர் | மெய் | உயிர்மெய் | ஆய்தம் |
|---|---|---|---|---|
| புதையல் | – | ல் | பு, தை, ய | – |
| அத்தை | அ | த் | தை | – |
| எஃகு | எ | – | கு | ஃ |
| ஔவையார் | ஔ | ர் | வை, யா | – |
| உணவு | உ | – | ண, வு | – |

**இ) கொடுக்கப்பட்டுள்ள எழுத்துகளைக் கொண்டு சொற்களை உருவாக்குக.**

1. நாடு 2. மனை 3. பாடு 4. சொல் 5. பானை
6. வினை 7. பாவி 8. விடு 9. பால் 10. வில்

## 10. அச்சம் தவிர்!

**பக்கம் 42**

**வினாக்களுக்கு விடையளி.**

1. இளைஞன் ஏன் மரத்தின் மீது ஏறினான்?
மரத்தின் உச்சியில் இருந்த கனிந்த பழங்களை பறிப்பதற்காக மரத்தின் மீது ஏறினான்.

2. கிளை ஏன் முறிந்தது?
இளைஞனின் பாரம் தாங்காமல் மரத்தின் கிளை முறிந்தது.

3. மரத்தில் தொங்கிக் கொண்டிருந்த இளைஞனைக் கண்ட முதியவர் என்ன செய்தார்?
மரத்தில் தொங்கிக் கொண்டிருந்த இளைஞனைக் கண்ட முதியவர், சிறிய சிறிய கற்களை எடுத்து அவன் மீது வீசினார்.

4. இளைஞன் எவ்வாறு மரத்திலிருந்து கீழே இறங்கினான்?
முதியவர் கல்லால் அடிப்பதைக் கண்ட அந்த இளைஞன் பெருமுயற்சி செய்து விறுவிறுவென அடுத்தக் கிளையின் மேல் ஏறி மரத்தை விட்டு கீழே இறங்கினான்.

5. அந்த முதியவர் இளைஞனுக்குச் செய்த உதவி என்ன?

அந்த முதியவர், பயத்துடன் மரத்தின் கிளையில் தொங்கிக் கொண்டிருந்த இளைஞனின் பயத்தை போக்கி, அவன் மரத்திலிருந்து கீழே பத்திரமாக இறங்க உதவி செய்தார்.

## 11. சிட்டு

**பக்கம் 44**

**வினாக்களுக்கு விடையளி.**

1. சிட்டுக்குருவியின் தோற்றம் எவ்வாறு இருக்கும்?

   சிட்டுக்குருவி கொட்டைப் பாக்கை போல அளவில் சிறியதாக இருக்கும்.

2. சிட்டு எங்கே தங்கும்?

   சிட்டுக்குருவி செடியில் வந்து தங்கும்.

3. சிட்டு எங்கே கூடு கட்டும்?

   சிட்டு புதரில் கூடு கட்டும்.

4. "சிட்டு"பாடலில் ஒன்று போல ஒலிக்கும் சொற்களை எடுத்து எழுதுக.

   அங்கும், இங்கும், எங்கும், தங்கும், கொட்டை, முட்டை.

5. சிட்டு என்னென்ன செய்யும் எனக் கவிஞர் குறிப்பிடுகிறார்?

   சிட்டு பாட்டுப் பாடும். அங்கும், இங்கும் துள்ளிச் செல்லும். பூச்சி, புழுவைத் தின்னும். புதரில் கூடு கட்டும். ஈச்சங் கொட்டையை போல சிறிய முட்டையை இடும் என கவிஞர் கூறுகிறார்.

## 12. சிறுவர் இதழ் தயாரிப்போம்!

**பக்கங்கள் 51-52**

**அ) எதிர்ச்சொல் எழுதுக.**

1. சேர்த்து 2. வேற்றுமை 3. நடக்கும் 4. தெரியாது

5. முடிப்போம் 6. கடினம்

**ஆ) கொடுக்கப்பட்டுள்ளச் சொற்களை வாக்கியத்தில் அமைத்து எழுதுக.**

1. சிறுவர் இதழ் தயார் செய்ய அனைவரும் சம்மதம் தெரிவித்தனர்.
2. சிறுவர் இதழில் நகைச்சுவைத் துணுக்குகள் இருந்தன.
3. விடுகதை தொகுப்பை தயார் செய்தாள்.
4. புதிய சொற்களை கண்டுபிடித்து எழுதுக.
5. சொல் விளையாட்டு விளையாடுவோம்.

6. குழுவாக இணைந்து சிறுவர் இதழை தயார் செய்வோம்.
7. விடுமுறையை பயனுள்ள முறையில் கழிப்போம்.
8. நாம் பெரியவர்களை தொந்தரவு செய்தல் கூடாது.
9. சிறுவர் இதழில் பத்து பக்கங்கள் உள்ளன.
10. எனக்கு மிகவும் பிடித்த ஓவியம் சிறுவர் இதழில் உள்ளது.

**இ) வினாக்களுக்கு விடையளி.**

1. அரையாண்டுத் தேர்வு விடுமுறையில் ஆசிரியர் கொடுத்த வீட்டுப்பாடம் என்ன?
   "சிறுவர் இதழ் தயாரித்தல்" என்னும் குழுச் செயல்பாடே அரையாண்டுத் தேர்வு விடுமுறையில் ஆசிரியர் கொடுத்த வீட்டுப்பாடம் ஆகும்.
2. குழுவில் இடம்பெற்ற மாணவர்கள் யாவர்?
   மணிகண்டன், கதிர், அப்துல், சங்கரி மற்றும் எழில் ஆகிய ஐவரும் குழுவில் இடம்பெற்ற மாணவர்கள் ஆவர்.
3. சிறுவர் இதழில் எத்தனை பக்கங்கள் இருக்க வேண்டுமென ஆசிரியர் கூறினார்?
   சிறுவர் இதழில் மூன்று பக்கங்கள் இருக்க வேண்டுமென ஆசிரியர் கூறினார்.
4. சிறுவர் இதழை எப்படிச் செய்ய வேண்டும் என மணிகண்டன் சொன்னான்?
   சிறுவர் இதழை அழகாகவும், எளிமையாகவும் செய்வோம் என மணிகண்டன் சொன்னான்.
5. சிறுவர் இதழில் உனக்குப் பிடித்த பகுதி எது?
   சிறுவர் இதழில் எனக்குப் பிடித்தப் பகுதி நகைச்சுவைத் துணுக்குகள் உள்ள பகுதி ஆகும்.

## 13. ஒருமை, பன்மை

**பக்கங்கள் 53-54**

**அ) ஒருமையைப் பன்மையாக்குக.**

1. இலைகள்
2. எலிகள்
3. பெண்கள்
4. புறாக்கள்
5. ஆண்கள்
6. செடிகள்
7. விழாக்கள்
8. விதைகள்
9. மலைகள்
10. பூனைகள்

**ஆ) பன்மையை ஒருமையாக்குக.**

1. மாடு
2. விரல்
3. புலி
4. மீன்
5. வீடு
6. பூ
7. நதி
8. மத்தளம்
9. பள்ளி
10. மாணவி

**இ) கீழே கொடுக்கப்பட்ட வினைச்சொற்களின் ஒருமை, பன்மையை எழுதுக.**

| | ஒருமை | | பன்மை |
|---|---|---|---|
| 1. | போனான் | – | போனார்கள் |
| 2. | சென்றாள் | – | சென்றார்கள் |
| 3. | தந்தான் | – | தந்தார்கள் |
| 4. | நடந்தாள் | – | நடந்தார்கள் |
| 5. | ஓடினான் | – | ஓடினார்கள் |
| 6. | படித்தாள் | – | படித்தார்கள் |
| 7. | விழித்தான் | – | விழித்தார்கள் |
| 8. | அமர்ந்தாள் | – | அமர்ந்தார்கள் |
| 9. | பேசினான் | – | பேசினார்கள் |
| 10. | சேர்ந்தான் | – | சேர்ந்தார்கள் |
| 11. | வாழ்ந்தான் | – | வாழ்ந்தார்கள் |
| 12. | கடித்தான் | – | கடித்தார்கள் |
| 13. | நின்றாள் | – | நின்றார்கள் |
| 14. | திறந்தான் | – | திறந்தார்கள் |
| 15. | கொடுத்தாள் | – | கொடுத்தார்கள் |

**ஈ) கீழ்க்கண்ட சொற்களை ஒருமை, பன்மை என வகைப்படுத்துக.**

ஒருமை : நான், அடுப்பு, குடை, நட்சத்திரம், கரிக்கோல், வளையல், பாம்பு, மேகம்.

பன்மை : நாம், கைகள், வாகனங்கள், காடுகள், பழங்கள், எறும்புகள், நாட்கள், படங்கள்.

## 14. அழகிய காற்றாடி

**பக்கம் 57**

**வினாக்களுக்கு விடையளி.**

1. சிறுவனின் காற்றாடி எப்படி இருந்தது?

   சிறுவனின் காற்றாடி மிகவும் அழகாக இருந்தது.

2. சிறுவனின் காற்றாடிக்கு என்ன பட்டம் வழங்க மேயர் விரும்பினார்?

   மேயர், "நகரத்தின் சாவி" எனும் பட்டத்தை காற்றாடிக்கு வழங்கினார்.

3. காற்றாடி பறந்ததற்கு தானே பொறுப்பு என்பதைச் சிறுவன் எவ்வாறு நியாயப்படுத்தினான்?

   தானே தனது கைகளால் அந்தக் காற்றாடியை உருவாக்கி, அதில் அழகான படங்களை வரைந்து பல வண்ண காகித துண்டுகளை ஒட்டி பறக்க வைத்ததால் அந்தக் காற்றாடி பறந்ததற்கு அவனே பொறுப்பு என நியாயப்படுத்தினான்.

4. சிறுவனைத் தவிர வேறு யார் காற்றாடி பறந்ததற்குத் தாமே காரணம் என்று கூறியவர்கள்?

காற்றும், நூலும் காற்றாடி பறந்ததற்கு தாமே காரணம் என கூறினார்கள்.

5. “அழகிய காற்றாடி” என்ற கதையிலிருந்து நீ என்ன தெரிந்து கொண்டாய்?

   எப்போதும் தனியாக செயல்படுவதை விட குழுவாக செயல்படுவதே சிறந்தது. கூட்டு முயற்சி என்பது பல நன்மைகளை அளிக்கும் என தெரிந்துக் கொண்டோம்.

## 15. உலகநீதி

**பக்கம் 60**

**வினாக்களுக்கு விடையளி.**

1. யாரை உறவாக நம்பக் கூடாது?

   பகைவனை உறவாக நம்பக் கூடாது.

2. எவ்வழியில் செல்லக் கூடாது என உலகநீதி கூறுகிறது?

   மனம் விரும்பிய வழியில் செல்லக்கூடாது என உலகநீதி கூறுகிறது.

3. கோபம் கொண்டால் என்னவாகும்?

   கோபம் கொண்டால் துன்பத்தில் சிக்கிக் கொள்ள நேரிடும்.

## 16. புறநானூறு

**பக்கம் 62**

**அ) எதிர்ச்சொல் எழுதுக.**

1. நன்று  2. கடிது  3. சிறியோர்  4. புகழ்தல்  5. அகம்

**ஆ) வினாக்களுக்கு விடையளி.**

1. தீதும், நன்றும் யார் தர வரும்?

   தீதும், நன்றும் பிறர் தர வராது. நாம் செய்யும் நன்மை, தீமையின் படியே வரும்.

2. புறநானூறு – குறிப்பு வரைக.

   புறநானூறு = புறம் + நான்கு + நூறு. இது நானூறு பாடல்களைக் கொண்ட சங்க தமிழ் நூலாகும். இது எட்டுத்தொகை நூல்களுள் ஒன்று. புறத்திணை சார்ந்த பாடல்கள் இந்நூலில் அடங்கியுள்ளன. இப்பாடல்கள் பல்வேறு புலவர்களால் பல்வேறு காலங்களில் பாடப்பட்டவை. புறநானூற்றின் பாடல்கள் சங்க கால அரசர்களைப் பற்றியும், மக்களின் சமூக வாழ்க்கை பற்றியும் தெளிவாக எடுத்துரைக்கின்றன.

3. யாரை உறவுகள் என்று கணியன் பூங்குன்றனார் குறிப்பிடுகின்றார்?

இந்த உலகில் உள்ள அனைவரும் நம்முடைய உறவுகள் என கணியன் பூங்குன்றனார் கூறுகிறார்.

4. வாழ்க்கையைப் பற்றி கணியன் பூங்குன்றனார் குறிப்பிடுவது என்ன?

இந்த உலகில் ஒருவர் பிறப்பதும், இறப்பதும் புதிதன்று. ஆகவே, கிடைத்திருக்கின்ற வாழ்வை இனியது என்று மகிழ்ந்தும், துன்பம் என வெறுத்தும் வாழக் கூடாது. வானம் மின்னும்போது பொழியும் மழையினால், கல்லை உருட்டிக் கொண்டு ஓடும் இரைச்சல் மிகுந்த வெள்ளத்தில் மிதந்து செல்லும் தெப்பத்தைப் போல நமது உயிரும் மிதந்து செல்லும். இதுவே வாழ்க்கை என பூங்குன்றனார் கூறுகிறார்.

## 17. தகவல் தொழில்நுட்பச் சாதனங்கள்

**பக்கங்கள் 53-54**

**வினாக்களுக்கு விடையளி.**

1. கருத்தரங்கில் மூன்றாம் வகுப்பு மாணவர்களுக்குக் கொடுக்கப்பட்ட தலைப்பு யாது?

"தகவல் தொழில்நுட்பச் சாதனங்கள்" என்பதே கருத்தரங்கில் மூன்றாம் வகுப்பு மாணவர்களுக்கு கொடுக்கப்பட்ட தலைப்பாகும்.

2. கருத்தரங்கில் கலந்து கொண்டவர்களின் பெயர்களை எழுதுக.

மலர்விழி, இனியன், பூங்குழலி, தமிழரசன் ஆகியோர் கருத்தரங்கில் கலந்து கொண்டனர்.

3. வானொலி பற்றி மலர்விழி கூறியதென்ன?

வானொலியைக் கண்டுபிடித்தவர் இத்தாலி நாட்டைச் சேர்ந்த மார்க்கோனி ஆவார். வானொலி மூலம் உலகச் செய்திகள், உள்நாட்டுச் செய்திகள், சிறந்த அறிஞர்களின் சொற்பொழிவுகள், அறிவியல் சிந்தனைகள், வேளாண்மைக் குறிப்புகள், சிறுகதைகள், நாடகங்கள், கவிதைகள், கல்வி தொடர்பான உரைகள் மற்றும் விளக்கங்கள், வானிலை அறிக்கைகள், திரைப்படப் பாடல்கள் ஆகியவற்றை கேட்கலாம். மேலும், வானொலியில் எல்லா மொழிகளிலும் நிகழ்ச்சிகள் ஒலிபரப்பப்படுகின்றன. குறிப்பாக இதில் ஒலிபரப்பப்படும் கல்வி தொடர்பான நிகழ்ச்சிகளை மாணவர்கள் நன்கு பயன்படுத்திக் கொள்ள வேண்டும்.

4. தொலைக்காட்சியின் பயன்களை எழுதுக.

தொலைக்காட்சி வாயிலாக நாம் வீட்டிலிருந்தவாறே சிறந்த

சொற்பொழிவுகள், கவியரங்கம், பட்டிமன்றம், இயற்கைக் காட்சிகள், விலங்குகள் மற்றும் பறவைகள் பற்றிய செய்திகள், நாட்டுப்புறக் கலைகள், வேளாண்மை நிகழ்ச்சிகள், கல்வி தொடர்பான செய்திகள் மற்றும் நிகழ்ச்சிகள், அறிவியல் சோதனைகள் முதலியவற்றை கண்களால் கண்டும், காதுகளால் கேட்டும் மகிழ முடியும். இதில் ஒளிபரப்பப்படும் நிகழ்ச்சிகள் மிக எளிதாக நம் மனதில் பதிந்து விடுகின்றன. வகுப்பறையை போலவே தொலைக்காட்சியின் வாயிலாக மாணவர்களால் எளிதாக பாடங்களை கற்றுக்கொள்ள முடியும். எனவே, இது ஒரு சிறந்த கல்விச் சாதனமாகவும் பயன்படுகிறது.

5. கணினி பற்றிக் குறிப்பு வரைக.

கணினியை முதன்முதலில் வடிவமைத்தவர் சார்லஸ் பாப்பேஜ். எனவே, இவர் கணினியின் தந்தை என அழைக்கப்படுகிறார். கல்வி வளர்ச்சிக்கு கணினி மிகவும் உறுதுணைாக உள்ளது. ஜான் பாஸ்டல் கண்டறிந்த இணையத்தின் மூலம் நம் உலகச் செய்திகளை கணினி வாயிலாக அறியலாம். மாணவர்கள் தாங்கள் விரும்பும் தகவல்களை அறியவும், தொலைதூரக் கல்வி மூலம் அறிவை பெருக்கிக் கொள்ளவும் இணையம் உதவுகிறது. இக்கருவி வீடு முதல் பள்ளிகள், வங்கிகள், வணிக வளாகங்கள், அலுவலகங்கள், தொழிற்சாலைகள், மருத்துவமனைகள் என பல்வேறு இடங்களில் பயன்படுத்தப்படுகிறது.

6. தொலைபேசி பற்றி தமிழரசன் கூறியவற்றைத் தொகுத்து எழுதுக.

தொலைபேசி என்பது தொலைவில் இருப்பவரிடம் பேசுவதற்கு பயன்படும் மின்கருவி ஆகும். இதனை முதன்முதலாக கண்டறிந்தவர் அலெக்ஸாண்டர் கிரகாம்பெல். தொலைபேசி விஞ்ஞான வளர்ச்சியால் அலைபேசியாக மாற்றம் அடைந்தது. முதல் அலைபேசியை "மோட்டோரோலா" நிறுவனத்தைச் சார்ந்த "மார்ட்டின் கூப்பர்" என்பவர் வடிவமைத்தார். வானொலி, தொலைக்காட்சி, கணினி, இணையம் என அனைத்தையும் தன்னுள் கொண்டிருப்பவையே அலைபேசிகள் என தமிழரசன் கூறினான்.

## 18. காலங்கள்

**பக்கங்கள் 67-69**

**அ) இறந்தகாலமாக மாற்றுக.**

| | | |
|---|---|---|
| 1. நின்றான் | 3. விதைத்தான் | 5. படித்தாள் |
| 2. சென்றாள் | 4. நடித்தாள் | 6. உழைத்தான் |

**ஆ) நிகழ்காலமாக மாற்றுக.**

| | | |
|---|---|---|
| 1. எழுதுகின்றாள் | 3. அடிக்கின்றான் | 5. சிரிக்கின்றான் |
| 2. வாழ்கின்றான் | 4. உண்கின்றாள் | 6. வரைகின்றாள் |

**இ) எதிர்காலமாக மாற்றுக.**

| | | |
|---|---|---|
| 1. குளிப்பாள் | 3. தூங்குவாள் | 5. ஓடுவாள் |
| 2. பாடுவேன் | 4. சமைப்பேன் | 6. நீந்துவேன் |

**ஈ) கீழ்க்காணும் வாக்கியங்களிலுள்ள வினைச்சொற்கள் எக்காலத்தைக் குறிக்கின்றன என எழுதுக.**

| | | |
|---|---|---|
| 1. இறந்தகாலம் | 6. இறந்தகாலம் | 11. எதிர்காலம் |
| 2. நிகழ்காலம் | 7. நிகழ்காலம் | 12. இறந்தகாலம் |
| 3. எதிர்காலம் | 8. நிகழ்காலம் | 13. இறந்தகாலம் |
| 4. இறந்தகாலம் | 9. எதிர்காலம் | 14. எதிர்காலம் |
| 5. நிகழ்காலம் | 10. இறந்தகாலம் | 15. நிகழ்காலம் |

## 19. நண்பனைத் தேடி...

**பக்கம் 74**

**அ) கோடிட்ட இடங்களை நிரப்புக.**

1. எலி 2. சூரியன் 3. மேகம் 4. காற்று 5. மலை

**ஆ) வினாக்களுக்கு விடையளி.**

1. எலி யாரைத் தேடிப்போனது?
   எலி வலிமையான நண்பனைத் தேடிப்போனது.

2. மேகம் எலியிடம் என்ன சொன்னது?
   மேகம், அங்கும் இங்கும் அலைவதால் எலிக்கு நண்பனாக இருக்க முடியாது எனக் கூறியது.

3. எலியிடம் ஆறு என்ன கூறியது?
   எலியுடன் குதித்து விளையாட வந்தால், ஆற்றினுள் மூழ்கி எலி இறந்துவிடும் என ஆறு கூறியது.

4. எலி ஏன் நண்பனைத் தேடிப்போனது?
   பூனையால் எலிக்கு அடிக்கடி ஆபத்து ஏற்படுவதால் தன்னை விட வலிமையான நண்பனைத் தேடிப்போனது.

5. மலை எலியிடம் என்ன சொன்னது?

எலிக்கு நண்பனாக இருக்க விரும்புவதாக மலை கூறியது. ஆனால், தன்னால் எலியுடன் ஓடி விளையாட முடியாது என கூறி மலை வருத்தப்பட்டது.

## 20. இனியவை நாற்பது

**பக்கம் 76**

**வினாக்களுக்கு விடையளி.**

1. "இனியவை நாற்பது" என்னும் பாடலை இயற்றியவர் யார்?

   "இனியவை நாற்பது" என்னும் பாடலை இயற்றியவர் பூதஞ்சேந்தனார்.

2. "இனியவை நாற்பது" என்னும் நூலின் நோக்கம் என்ன?

   உலகில் இனிமையான கருத்துகளை எடுத்துக் கூறுவதன் மூலம் மக்களுக்கு நீதி புகட்டுவதே "இனியவை நாற்பது" நூலின் நோக்கமாகும்.

3. எவையெல்லாம் இனியவை எனக் கவிஞர் கூறுகிறார்?

   அறிவுடையவர் வாழும் ஊரில் வாழ்வது இனியது. அறநூலில் சொல்லிய விதிப்படி வாழ்கின்ற தவத்தோரது பெருமை இனியது. குறைவில்லாத மிகுந்த சிறப்பினை உடைய மூத்தோரான தாய், தந்தையரை தொழுது வணங்குதல் மிக இனியது என கவிஞர் கூறுகிறார்.

## 21. செய்திகள் அறிவோமா!

**பக்கம் 80**

**அ) கோடிட்ட இடங்களை நிரப்புக.**

1. சிரிக்கும் குருவிகள்
2. கூம்பு நத்தை
3. அம்மு, பொம்மு
4. கால்கள்
5. 1,500 கிலோ

**ஆ) வினாக்களுக்கு விடையளி.**

1. அம்மு, பொம்மு இருவரும் எந்த வகுப்பில் படிக்கிறார்கள்?

   அம்முவும், பொம்முவும் மூன்றாம் வகுப்பில் படிக்கிறார்கள்.

2. நத்தையை உனக்குப் பிடிக்குமா? ஏன்?

   நத்தையை எனக்கு பிடிக்காது. அதைப் பார்த்தாலே அருவருப்பாக இருக்கும்.

3. உனக்குத் தெரிந்த குருவிகளின் பெயர்கள் மூன்றினை எழுதுக.

   கதிர்க்குருவி, தூக்கணாங்குருவி, சிட்டுக்குருவி.

## 22. சொல் வகை

**பக்கங்கள் 83-84**

**அ) சரியான பெயர்ச்சொல்லை எழுதுக.**

1. கோயில்
2. பேருந்து
3. ஆசிரியர்
4. வேடர்
5. அஞ்சல்காரர்
6. காவலர்
7. உழவர்
8. பசு
9. மரம்
10. பள்ளிக்கூடம்
11. மருத்துவர்
12. மீனவர்
13. மாணவர்
14. பாத்திரம்
15. நிலவு

**ஆ) பின்வரும் பெயர்ச்சொற்கள் எவ்வகையைச் சார்ந்தன என எழுதுக.**

1. இடப்பெயர்
2. சினைப்பெயர்
3. காலப்பெயர்
4. இடப்பெயர்
5. பொருட்பெயர்
6. காலப்பெயர்
7. பண்புப்பெயர்
8. தொழிற்பெயர்
9. பண்புப்பெயர்
10. பொருட்பெயர்

**இ) பின்வரும் வினைச்சொற்களின் பகுதியை எழுதுக.**

1. வளர்
2. அறி
3. பாடு
4. வா
5. கேள்
6. வாழ்
7. கூவு
8. வினவு

**ஈ) பின்வரும் சொற்றொடர்களில் உள்ள வினைச்சொற்களை எடுத்து எழுதுக.**

1. விழுந்தது
2. அடித்தாள்
3. ஈன்றது
4. வந்தான்
5. சென்றான்
6. கூவியது
7. மேய்ந்தன
8. குதித்தது
9. அழுதது
10. கற்பித்தார்

**உ) பெயர்ச்சொற்களையும், வினைச்சொற்களையும் வகைப்படுத்தி எழுதுக.**

பெயர்ச்சொல் : கண்கள், தாமரை, பள்ளி, வளவன், கோயில், புத்தகம், வீடு, கோபுரம், பந்து, நாற்காலி.

வினைச்சொல் : பறித்தது, ஓடின, வளர்ந்தது, நடி, விழுந்தது, தொழுதான், பூசின, அழுதன, புகுந்தது, கடி.

**ஊ) கொடுக்கப்பட்டுள்ள பெயர்ச்சொற்களோடு தகுந்த வினைச்சொற்களைப் பொருத்துக.**

1. விவேக் விளையாடுகிறான்.
2. நிலவு தேய்கிறது.
3. மல்லிகை மணக்கிறது.
4. சூரியன் உதிக்கிறான்.
5. சுந்தரி சிரிக்கிறாள்.
6. வானம் கறுத்தது.

## 23. அன்பே சிவம்!

**பக்கம் 89**

**வினாக்களுக்கு விடையளி.**

1. இராஜராஜ சோழனின் சந்தேகம் என்ன?

"உலகில் அனைவருக்கும் மகிழ்ச்சியைத் தரக்கூடிய பொருள் எது?" என்பதே இராஜராஜ சோழனின் சந்தேகம் ஆகும்.

2. என்னென்ன பொருட்கள் கொலு மண்டபத்தில் வைக்கப்பட்டிருந்தன?
   பொன், இசைக்கருவி, மலர்கள், இனிப்பு பலகாரங்கள், சிவலிங்கம் ஆகியன கொலு மண்டபத்தில் வைக்கப்பட்டிருந்தன.

3. மன்னரின் சந்தேகத்தைத் தீர்ப்பவருக்கு என்ன பரிசு வழங்குவதாக அறிவிக்கப்பட்டது?
   மன்னரின் சந்தேகத்தை தீர்த்து வைப்பவருக்கு ஆயிரம் பொற்காசுகள் பரிசாக வழங்கப்படும் என அறிவிக்கப்பட்டது.

4. சிற்பி வடித்திருந்த சிலையின் அர்த்தமென்ன?
   இந்த உலகில் அன்பை மட்டும்தான் கண் தெரியாதவர்களும், காது கேட்காதவர்களும், வாய் பேச முடியாதவர்களும் உணர முடியும். அதேபோல், உடல்நலம் இல்லாதவர்களும் அன்பைத்தான் எதிர்பார்க்கிறார்கள். அன்பு மட்டுமே உலகில் சிறந்தது. அன்பு எதிரியையும் நண்பனாக்கும். உலகில் சிறந்ததும், அனைத்து ஜீவராசிகளுக்கும் மகிழ்ச்சியைத் தரக்கூடியதுமான அன்புதான் இறைவன் என்பதே சிற்பி வடித்திருந்த சிலையின் அர்த்தமாகும்.

5. மன்னரின் சந்தேகத்தைத் தீர்த்தவர் யார்?
   ஓர் ஏழை சிற்பி மன்னரின் சந்தேகத்தைத் தீர்த்து வைத்தார்.

## 24. திருக்குறள்

**பக்கம் 93**

**அ) எதிர்ச்சொல் எழுதுக.**

1. சிறியர் 2. எளிய 3. அறிவிலார் 4. தீமை

**ஆ) வினாக்களுக்கு விடையளி.**

1. எது நிலையான உடைமை?
   ஒருவர்க்கு ஊக்கமுடைமையே நிலையான உடைமை ஆகும்.

2. அறிவில்லாதவர் பெற்ற செல்வம் எத்தகையது?
   அறிவில்லாதவர் பெற்ற செல்வம் ஒன்றும் இல்லாததைப் போன்றதாகும்.

3. திருவள்ளுவர் யாரை பெரியர், சிறியர் எனக் கூறுகிறார்?
   செய்வதற்கரிய செயல்களைச் செய்யும் வல்லமை உடையவர் பெரியர். செய்வதற்கரிய செயல்களைச் செய்ய இயலாதவர் சிறியர்.

4. “ஈன்ற பொழுதின் பெரிதுவக்கும்” என்ற குறளின் பொருளை விளக்குக?

   தன் மகனை நற்பண்புடையவன் என அறிவுடையவர் கூறுவதைக் கேட்கும் தாய் அவன் பெற்ற பொழுது மகிழ்வதைக் காட்டிலும் பெரிதும் மகிழ்வாள்.

5. இன்னா செய்தாரை தண்டிக்கும் வழி யாது?

   நமக்குத் தீமை செய்தவரைத் தண்டிக்கும் வழி, அவர் வெட்கப்படும்படி அவருக்கு நன்மையைச் செய்து விட்டு, அவர் செய்த தீமைகளையும், நாம் செய்த நன்மைகளையும் மறந்துவிடுவது ஆகும்.

## 25. சுவாமி விவேகானந்தர்

**பக்கம் 97**

**வினாக்களுக்கு விடையளி.**

1. விவேகானந்தர் எங்கு, எப்போது பிறந்தார்?

   விவேகானந்தர் 1863 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 12 ஆம் நாள் கொல்கத்தாவில் பிறந்தார்.

2. விவேகானந்தரின் இயற்பெயர் என்ன? அவர் பெற்றோரின் பெயர்களையும் குறிப்பிடுக.

   விவேகானந்தரின் இயற்பெயர் நரேந்திரநாத் தத்தா. இவரின் பெற்றோர் விஸ்வநாத் தத்தா, புவனேஸ்வரி தேவி.

3. “மூன்று வரங்கள்” என்ற கதை சொல்லும் நீதி என்ன?

   ஆசை ஆபத்தில் முடியும். எனவே, இருப்பதைக் கொண்டு சிறப்பாக வாழ வேண்டும்.

4. “கிணற்றுத் தவளை” என்ற கதையிலிருந்து நீ என்னக் கற்றுக் கொண்டாய்?

   நாம் நம் சமயம் என்ற சிறிய கிணற்றுக்குள் இருக்காமல் வெளியே வந்து உலகைப் புரிந்து கொள்ள வேண்டும். அப்போது தான் நம் மனம் பல நல்ல விஷயங்களைக் கற்றுக் கொள்வதற்கு ஏற்றதாக விரிவடையும்.

5. விவேகானந்தர் நிறுவிய அமைப்புகளின் பெயர்களைக் கூறுக.

   “ஸ்ரீராமகிருஷ்ணர் மடம்” மற்றும் “ஸ்ரீராமகிருஷ்ணர் மிஷன்” போன்ற அமைப்புகளை விவேகானந்தர் நிறுவினார்.

6. “தேசிய இளைஞர் தினம்” எப்போது கொண்டாடப்படுகிறது?

   விவேகானந்தரின் பிறந்தநாளான ஜனவரி 12 ஆம் நாள் தேசிய இளைஞர் தினமாக கொண்டாடப்படுகிறது.

## 26. திணை மற்றும் பால்

**பக்கங்கள் 100-102**

**அ) ஆண்பாலை, பெண்பாலாக மாற்றி, அதற்கேற்ப சொற்றொடர்களை எழுதுக.**

1. என் தாய் மிக நல்லவள்.
2. எங்கள் அத்தை செல்வந்தர்.
3. சிறுமி விளையாடினாள்.
4. அரசி சிறப்பாக ஆட்சி செய்தாள்.
5. பாட்டி பேரனைக் கண்டு மகிழ்ந்தாள்.

**ஆ) ஒன்றன் பாலை, பலவின் பாலாக மாற்றி, சொற்றொடர்களை எழுதுக.**

1. மான்கள் மேய்ந்தன.
2. குரங்குகள் வந்தன.
3. புத்தகங்கள் நாற்காலியின் மேல் இருந்தன.
4. ஆடுகள் மலையில் ஏறின.
5. குருவிகள் இரை தேடிச் சென்றன.

**இ) கீழ்க்காணும் சொற்றொடர்களில் வந்துள்ள பால் வகையை எழுதுக.**

1. ஆண்பால்
2. பெண்பால்
3. பலர் பால்
4. ஒன்றன் பால்
5. ஆண்பால்
6. பலவின் பால்
7. ஒன்றன் பால்
8. பெண்பால்
9. பலர் பால்
10. ஒன்றன் பால்
11. பெண்பால்
12. ஒன்றன் பால்

**ஈ) ஆண்பாலாகவும், பெண்பாலாகவும் மாற்றி, சொற்றொடர்களை எழுதுக.**

1. சிறுமி வீட்டிற்குச் சென்றாள்.
2. அத்தை வந்தாள்.
3. அக்கா கதை கூறினாள்.
4. கவிஞை கவிதை எழுதினாள்.
5. மணமகள் அலங்காரம் செய்கிறாள்.
6. தோழன் பாட்டுப் பாடினான்.
7. தாத்தா மகிழ்ந்தார்.
8. மணி பள்ளிக்குச் சென்றாள்.
9. தம்பி விளையாடினான்.
10. பாட்டி கடைக்குச் சென்றாள்.

## 27. சர்க்கரை மண்ணானது!

**பக்கம் 107**

**வினாக்களுக்கு விடையளி.**

1. காவலன் எதை உலர வைத்துக் கொண்டிருந்தான்?
   காவலன் வெளிநாட்டிலிருந்து வந்த சர்க்கரையை உலர வைத்துக் கொண்டிருந்தான்.

2. மன்னர் தெனாலி ராமனை ஏமாற்றுவதற்காக என்ன கூறினார்?
   மன்னர் தொனாலி ராமனிடம் இது வெளிநாட்டிலிருந்து வந்த மண் என்று கூறினார்.

3. நாட்டில் யார் அதிகமாகி விட்டார்கள் என தெனாலி கூறினார்?

தெனாலி மன்னரிடம் "நாட்டில் பொய் பேசுபவர்கள் அதிகமாகி விட்டனர். மிகவும் நம்பிக்கைக்கு உரியவர்கள் கூட பொய் பேசுகிறார்கள்" என்று கூறினார்.

4. தெனாலி ராமனின் மகன் அரசவைக்கு எதற்காக வந்தான்?

தெனாலி வீட்டிலிருந்த மாடு இறந்து விட்டது என்பதை கூறுவதற்காக தெனாலி ராமனின் மகன் அரசவைக்கு வந்தான்.

5. தெனாலி ராமன் எதை அள்ளி மூட்டை கட்டினார்? ஏன்?

தெனாலி துணியில் கொட்டி உலர வைக்கப்பட்டிருந்த சர்க்கரையை அள்ளி மூட்டை கட்டினார். மன்னர் கூறியது பொய் என்பதை நிரூபிக்கவே தெனாலி அவ்வாறு செய்தார்.

## 28. மூதுரை

**பக்கம் 110**

**வினாக்களுக்கு விடையளி.**

1. எவையெல்லாம் நன்மை தரும் என ஔவையார் கூறுகிறார்?

நல்ல பண்பு உடையவர்களைக் காண்பதும், நல்லவர்களின் அறிவுரைகளைக் கேட்டு நடப்பதும், நல்லவர்களின் நற்பண்புகளைப் பிறருக்கு எடுத்துச் சொல்வதும், நல்லவர்களுடன் நட்புக் கொண்டு வாழ்வதும் நன்மை தரும்.

2. யாரோடு நட்புக் கொள்ள வேண்டும்?

நல்லவர்களுடன் நட்புக் கொள்ள வேண்டும்.

## 29. நீதிநெறி விளக்கம்

**பக்கம் 111**

**வினாக்களுக்கு விடையளி.**

1. பிறர் தன்னை மதிக்க வேண்டும் என விரும்புபவர் என்ன செய்ய வேண்டும்?

பிறர் தன்னை மதிக்க வேண்டும் என விரும்புபவர் மறக்காமல் செய்ய வேண்டியது, மற்றவரது பெருமைகளை பிறர் அறியுமாறு சொல்வதும்,குறைகளை வெளியே சொல்லாமல் காப்பதும் ஆகும்.

2. "நீதிநெறி விளக்கம்" பாடலை இயற்றியவர் யார்?

"நீதிநெறி விளக்கம்" பாடலை இயற்றியவர் குமரகுருபர சுவாமிகள்.

## 30. இப்படி நடந்தால்?

**பக்கம் 114**

**அ) கோடிட்ட இடங்களை நிரப்புக.**

1. தொலைக்காட்சி பெட்டி
2. பொம்மைப் படம்
3. அலைபேசி
4. உள்கதவை
5. உதவிக் குழு

**ஆ) பேச்சு வழக்குச் சொற்களை எழுத்து வழக்கமாக மாற்றுக.**

1. வேண்டும்
2. அடித்துக்கொண்டு
3. ஆட்கள்
4. வைத்து இருக்கிறதா
5. வீட்டின் உள்ளே

**இ) வினாக்களுக்கு விடையளி.**

1. சிறுவர்கள் உதவி மைய எண்ணை எழுதுக.
   சிறுவர்கள் உதவி மைய எண் 1098.

2. காவல்துறை உதவிக்கு அழைக்க வேண்டிய எண்ணை எழுதுக.
   காவல்துறை உதவிக்கு அழைக்க வேண்டிய எண் 100.

3. அவசர ஊர்தி உதவிக்கு எந்த எண்ணை அழைக்க வேண்டும்?
   அவசர ஊர்தி உதவிக்கு அழைக்க வேண்டிய எண் 108.

4. கவிதா பயப்படக் காரணம் என்ன?
   கவிதாவின் வீட்டின் முன்பு தெரியாத இரண்டு இளைஞர்கள் இருப்பதைக் கண்டு பயந்தாள்.

5. நீ தனியாக இருக்கும் போது வீட்டிற்குப் புதியவர் யாரேனும் வந்தால் என்ன செய்வாய்?
   நான் தனியாக இருக்கும் போது வீட்டிற்குப் புதியவர் யாரேனும் வந்தால் உடனடியாக எனது பெற்றோர்க்கு தகவல் கொடுப்பேன்.

## 31. இரட்டைக்கிளவி மற்றும் அடுக்குத்தொடர்

**பக்கங்கள் 116-117**

**அ) கீழே உள்ள கட்டங்களில் உனக்குத் தெரிந்த அடுக்குத்தொடர் மற்றும் இரட்டைக்கிளவி சொற்களை எழுதுக.**

| அடுக்குத்தொடர் | இரட்டைக்கிளவி |
|---|---|
| குலுங்கிக் குலுங்கி | சலசல |
| சாரை சாரை | சிலசில |
| தீ தீ | படபட |
| பாம்பு பாம்பு | கடகட |
| மன்னா மன்னா | மடமட |

**ஆ) கோடிட்ட இடங்களைத் தகுந்த இரட்டைக்கிளவி/அடுக்குத்தொடர் கொண்டு நிரப்புக.**

1. கலகல
2. படபட
3. குடுகுடு
4. சுற்றிச் சுற்றி
5. பாம்பு பாம்பு

## 32. சுத்தமான உப்பு வேண்டும்!

**பக்கங்கள் 119-120**

**அ) பொருள் எழுதுக.**

1. வாசனை 2. அறிவுரை 3. பொருட்கள்

**ஆ) பிரித்து எழுதுக.**

1. துணி + பை 2. நீரில் + இருந்து 3. அலசி + எடுத்து

**இ) சேர்த்து எழுதுக.**

1. மளிகைப் பொருட்கள் 2. கடுங்கோபம்

**ஈ) வினாக்களுக்கு விடையளி.**

1. பரமார்த்த குருவிற்கு எத்தனைச் சீடர்கள் இருந்தனர்?
   பரமார்த்த குருவிற்கு ஐந்து சீடர்கள் இருந்தனர்.
2. உப்பு வாங்கச் சென்றவன் யார்?
   உப்பு வாங்கச் சென்றவன் மட்டி.
3. மட்டி, உப்பைச் சுத்தமாக்க வேண்டி என்ன செய்தான்?
   மட்டி உப்பைச் சுத்தமாக்க வேண்டி உப்புப்பையை ஆற்று நீரில் நனைத்தான்.
4. பையிலிருந்த உப்பு எங்கே சென்றது?
   பையிலிருந்த உப்பு ஆற்று நீரில் கரைந்து போனது.
5. மட்டியின் பதிலைக் கேட்ட பரமார்த்த குரு என்ன செய்தார்?
   மட்டியின் பதிலைக் கேட்ட பரமார்த்த குரு சமையலை மறந்துபோய் உப்பைப் பற்றிய சிந்தனையில் ஆழ்ந்தார்.

## 34. காண்போம்! கற்போம்!

**பக்கம் 126**

**அ) எதிர்ச்சொல் எழுதுக.**

1. குட்டையான 2. இறங்கு 3. போ 4. வெளியே

**ஆ) பிரித்து எழுதுக.**

1. அனுமதி + சீட்டு 2. நுனி + கிளையில் 3. அறிவிப்பு + பலகை

**இ) வினாக்களுக்கு விடையளி.**

1. கோபிகாவும் குழந்தைகளும் எங்கே சென்றனர்?
   கோபிகாவும், குழந்தைகளும் தஞ்சையிலுள்ள சிவகங்கை பூங்காவிற்குச் சென்றனர்.
2. ஒட்டகச்சிவிங்கியைப் பற்றி பிரியன் என்ன சொன்னான்?
   ஒட்டகச்சிவிங்கி மிக உயரமாக இருந்தது எனவும், உயரமான மரத்தின் நுனிக் கிளையின் மேலிருந்த இலைகளை தின்றது எனவும் பிரியன் கூறினான்.

3. ஏன் விலங்கு மற்றும் பறவைகளுக்கு நமது உணவைக் கொடுக்கக் கூடாது?

   நாம் உண்ணும் உணவினை பறவைகளுக்கும், விலங்குகளுக்கும் கொடுத்தால் அவற்றிற்கு உடல்நலக் குறைவு ஏற்படும்.

4. தாத்தா என்னென்ன தின்பண்டங்கள் வாங்கிக் கொடுத்தார்?

   தாத்தா அனைவருக்கும் சுண்டல், சோளம் மற்றும் மாங்காய் கீற்று போன்ற திண்பண்டங்களை வாங்கிக் கொடுத்தார்.

5. யாரெல்லாம் படகு சவாரி சென்றார்கள்?

   குழந்தைகளும் தாத்தாவும் படகு சவாரி சென்றார்கள்.

6. குழந்தைகள் பூங்காவில் கண்ட பறவைகள் மற்றும் விலங்குகளின் பெயர்களைப் பட்டியலிடுக.

   பறவைகள், மான்கள், ஆண் மயில், பெண் மயில், புள்ளி மான்கள், ஒட்டகச்சிவிங்கி.

## 35. இலக்கணப் பயிற்சி

### பக்கங்கள் 128-130

**அ) வண்ணமிட்ட எழுத்தை பிரித்து எழுதுக.**

1. கொ = க் + ஒ
2. வி = வ் + இ
3. தூ = த் + ஊ
4. போ = ப் + ஓ
5. வு = வ் + உ
6. கு = க் + உ
7. தீ = த் + ஈ
8. சொ = ச் + ஒ
9. மெ = ம் + எ
10. கா = க் + ஆ
11. தொ = த் + ஒ
12. தே = த் + ஏ
13. ழு = ழ் + உ
14. தோ = த் + ஓ
15. பீ = ப் + ஈ

**ஆ) விடுபட்ட ஓரெழுத்துச் சொற்களை எடுத்து எழுதுக.**

1. கை
2. பூ
3. தீ
4. பை
5. மை
6. ஈ
7. கோ
8. ஆ
9. தை
10. மா
11. ஔ
12. ஐ

**இ) காய்கறிகளின் பெயர்களில் விடுபட்ட எழுத்துகளை எழுதுக.**

1. பரங்கிக்காய்
2. வெள்ளரிக்காய்
3. வெண்டைக்காய்
4. வெங்காயம்
5. தக்காளி
6. வாழைக்காய்
7. பச்சைமிளகாய்
8. கத்தரிக்காய்
9. முள்ளங்கி
10. சுரைக்காய்

**ஈ) மாதங்களின் பெயர்களில் விடுபட்ட எழுத்துகளை எழுதுக.**

1. ஆனி
2. ஐப்பசி
3. பங்குனி
4. புரட்டாசி
5. சித்திரை
6. கார்த்திகை
7. ஆடி
8. வைகாசி
9. ஆவணி
10. மார்கழி

**உ) எழுத்துகளை மாற்றி அமைத்து சரியான சொற்களை உருவாக்குக.**

| | | | | |
|---|---|---|---|---|
| 1. வீரன் | 4. செய்யுள் | 7. ஊஞ்சல் | 10. கரடி | 13. மல்லிகை |
| 2. முயல் | 5. விண்மீன் | 8. திராட்சை | 11. வானம் | 14. குரங்கு |
| 3. தமிழ் | 6. இந்தியா | 9. பாடல் | 12. ஆந்தை | 15. சக்கரம் |

**ஊ) கொடுக்கப்பட்டுள்ள சொற்களிலிருந்து புதிய சொற்களை உருவாக்குக.**

1. திடம், திண், பண்டம், படம்
2. கண், காட்சி, காசி, கட்சி
3. மெய், பொருள், பொய்
4. கன்று, குட்டி, கட்டி, குடி
5. நிலை, கடலை, கலை

## 36. ஏமாற்றாதே! ஏமாறாதே!

**பக்கம் 133**

**வினாக்களுக்கு விடையளி.**

1. முல்லா கடவுளிடம் என்ன வேண்டிக் கொள்வார்?

   முல்லா கடவுளிடம் தனக்கு ஆயிரம் தங்க நாணயங்கள் வேண்டும் எனவும், அதில் ஒன்று குறைந்தாலும் வாங்கிக் கொள்ள மாட்டேன் எனவும் வேண்டிக் கொள்வார்.

2. பக்கத்து வீட்டுக்காரர் முல்லாவை ஏமாற்ற என்ன செய்தார்?

   பக்கத்து வீட்டுக்காரர் முல்லாவை ஏமாற்ற தனது பணப்பையை முல்லாவின் சன்னல் வழியாக முல்லாவை நோக்கி வீசினார்.

3. பணப்பையைக் கண்ட முல்லா என்ன செய்தார்?

   முல்லா பணப்பையைக் கண்டதும் கடவுள் என் வேண்டுதலை நிறைவேற்றிவிட்டார் என நாணயங்களை எண்ணத் தொடங்கினார்.

4. ஏன் முல்லாவும், பக்கத்து வீட்டுக்காரரும் நீதிபதியிடம் சென்றனர்?

   பணப்பை என்னுடையது என பக்கத்து வீட்டுக்காரர் கூறினார். ஆனால், முல்லா அந்தப் பையை அதை தர மறுத்தார். ஆகவே இருவரும் நீதிபதியிடம் சென்றனர்.

5. முல்லா எவ்வாறு தன் அறிவுக்கூர்மையை வெளிப்படுத்தினார்?

   முல்லா தனக்கு உடல்நிலை சரியில்லை என்று கழுதையையும், ஆடை அழுக்காக உள்ளது என்று பக்கத்து வீட்டுக்காரரின் சட்டையும் வாங்கிக் கொண்டார். பின்னர் நீதிபதியிடம் பக்கத்துக்கு வீட்டுக்காரர் தன்னிடம் உள்ள கழுதை, அணிந்துள்ள உடை எல்லாம் அவருடையது என கூறுவதாக சொல்லி தனது அறிவுக்கூர்மையை வெளிப்படுத்தினார்.